**சுருக்கம்**

கோயம்புத்தூர் மாநகராட்சி மேட்டுப்பாளையம் சாலையில் பேருந்து நிலையம் அமைத்தல் – திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீடான ரூ.700/– இலட்சம் செலவில் கட்டுமானம் மேற்கொள்ள – திருத்திய நிர்வாக ஒப்புதல் அனுமதித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(மாந2) துறை**

**அரசாணை(நிலை) எண். 12** **நாள் :28.01.2009**

**படிக்க :**

1) அரசாணை (நிலை) எண்.24, நநிமகுவ துறை, நாள் 18.2.05
2) கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரின் கடித எண்.7526/02/எம்டி3, நாள் 1.8.08
3) நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க.எண்.9783/2008/மாநஇஅ3, நாள் 19.11.2008

**ஆணை :**

பார்வை 1–ல் படிக்கப்பட்ட அரசாணையில் கோயம்புத்தூர் மேட்டுப்பாளையம் சாலையில் புதிதாக பேருந்து நிலையம் அமைக்க ரூ.558.53 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, மேற்படி தொகையில் ரூ.132.50 இலட்சம் மாநகராட்சி நிதியிலிருந்தும், ரூ.426.03 இலட்சம் நகர்ப்புற நிதி வளர்ச்சி நிதியத்திடமிருந்தும் கடனாகப் பெற்று மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2) மேலும், இத்திட்டத்திற்காக இருமுறை அறிவிப்புகள் வெளியிடப்பட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படாததால் பணிகள் துவக்கப்படவில்லையென்றும், 2006–07–ம் ஆண்டு ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் ( JNNURM) பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அதனையும் நடைமுறைப்படுத்த இயலாத சூழ்நிலையில், 2007–08–ம் ஆண்டு விலைவிகிதப்படி ரூ.700/– இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதாகவும், கூடுதல் செலவினத்தை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவிருப்பதாக தெரிவித்து திருத்திய மதிப்பீட்டிற்கு அரசின் நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் கருத்துரு அனுப்பியுள்ளார்.

3) மேற்கூறிய சூழ்நிலையில், நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பினை ஏற்று, கோயம்புத்தூர் மாநகராட்சி மேட்டுப்பாளையம் சாலையில் ரூ.700/– இலட்சம் மதிப்பீட்டில் பேருந்து நிலையம் கட்டுவதற்கு திருத்திய நிர்வாக அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4)இவ்வாணை 6.01.2009 நாளிட்ட நிதித்துறையின் அ.சா.கு.எண்.202/JS(JV)/08–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

/ ஆளுநரின் ஆணைப்படி /

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி, கோயம்புத்தூர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–5.
தலைமை செயல் அலுவலர், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி நிறுவனம், சென்னை–17.
இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை, சென்னை –108.
நகல்
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9
நிதி (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்) துறை சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்.